

சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் திறக்கப்பட்டுள்ள புதிய சுரங்கப்பாதையை படத்தில் காணலாம்.

### சென்னை சென்ட்ரல் நிலையத்தில்

# 4 ரெயில் நிலையங்களை இணைக்கும் புதிய சுரங்கப்பாதை திறப்பு

## பயணிகளுக்கு நவீன வசதிகள்

சென்னை, டிச. 13–

சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் பயணிகள் வசதிக்காக 4 ரெயில் நிலையங்களை இணைக்கும் வகையில் அதிநவீன சுரங்கப்பாதை திறக்கப்பட்டுள்ளது.

**சென்ட்ரல் நிலையம்**

சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்துக்கு தினமும் 2 லட்சம் பயணிகள் வந்து செல்கிறார்கள். இங்கு எக்ஸ்பிரஸ் ரெயில் நிலையம், புறநகர் ரெயில் நிலையம், மெட்ரோரெயில் நிலையம், பறக்கு ரெயில் நிலையம் ஆகியவை அருகருகே அமைந்துள்ளன.

இதனால் சென்ட்ரல் ரெயில் நிலைய வளாகம் எப்போதும் பரபரப்பாக காணப்படும் ரெயில் நிலையங்களுக்கு வந்து செல்லும் பயணிகளுக்காக 'எக்ஸ் லேட்டர்', 'லிப்ட்' உள்ளிட்ட பல்வேறு சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**புதிய சுரங்கப்பாதை**

இந்த நிலையில் சென்ட்ரல் நிலையம், புறநகர் ரெயில் நிலையம், மெட்ரோ ரெயில் நிலையம், பறக்கும் ரெயில் நிலையங்களை இணைக்கும் விதமாக புதிய சுரங்கப்பாதை பயணிகள் வசதிக்காக திறக்கப்பட்டுள்ளது.

இந்த சுரங்கப்பாதை மூலம் பயணிகள் எளிதில் அனைத்து ரெயில் நிலையங்களுக்கும் செல்ல முடியும். பூந்தமல்லி நெடுஞ்சாலை, பல்லவன் சாலையில் போக்குவரத்து நெரிசல் குறைவதற்கு இந்த புதிய சுரங்கப்பாதை உதவியாக இருக்கும்.

**சாலையின் குறுக்கே நடக்க தடை**

சென்ட்ரல் ரெயில் நிலையத்தின் முன் பக்கத்தில் இருந்து பல்லவன் சாலை, பூந்தமல்லி நெடுஞ்சாலை குறுக்கே நடக்க தடை விதிக்கப் பட்டுள்ளது. சுரங்கப் பாதையை உபயோகிக்க பயணிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**கார் பார்க்கிங்**

மெட்ரோ ரெயில் நிலைய பணிகள் காரணமாக சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் மூடப்பட்டு இருந்த 'பிரிமியம்' கார் பார்க்கிங் வசதி தற்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. ஒரு மணி நேரத்துக்கு கார்களை நிறுத்த ரூ. 50 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.